முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2015 யூலை

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

(Advanced Financial Accounting)

2015-08-01
முற்பகல்
[9.00 – 12.00]

பக்கங்கள் : 12
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***நேரம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகள் மற்றும் கணிப்பீடுகளைத் தருக. நீர் எடுகோள்கள் எவற்றையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள் மாத்திரம் அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

எட்டு (08) கட்டாய வினாக்கள்

(மொர்ததம் 20 புள்ளிகள்)

### வினா இல. 01

***1.1*** *தொடக்கம்* ***1.6*** *வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடைகளை உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தினை எழுதி அதற்கு எதிராக எழுதுக.*

**1.1** மோசடிகளை தடை செய்யும் ஒழுங்குச் சட்டத்தின் கீழ் பங்குடமை ஒன்றின் பதிவு செய்தல் தேவைப்பாடுகளைக் கூறுக. (02 புள்ளிகள்)

**1.2** இருப்பிலுள்ள பங்குடமையானது முடிவுக்கு வந்துள்ளதாகக் கருதப்பட்டு மீள்நிர்ணயம் (reconstitution) தேவைப்படும் மூன்று (03) சந்தர்ப்பங்களைக் கூறுக. (03 புள்ளிகள்)

**1.3** LKAS 37 – ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள் நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடு ஒன்றினை ஏற்பிசைவு செய்வதற்கு திருப்திசெய்யப்பட மூன்று (03) தேர்வு நிபந்தனைகளைக் கூறுக. (03 புள்ளிகள்)

**1.4** **லீடர்ஸ் கல்லூரியின்** பழைய மாணவர் சங்கம் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது கீழ்வரும் அன்பளிப்புக்களைப் பெற்றது :

| | **ரூ.** |
|---|---|
| பொதுத் தேவைகளுக்காக | 22,222 |
| புலமைப்பரிசில் நிதியத்திற்காக | 44,450 |

சங்கத்தின் கணக்கேடுகளில் காசு ஊடுசெயல்கள் அடங்கலாக மேற்படி ஊடுசெயல்களை பதிவு செய்வதற்கு தேவையான நாளேட்டுப் பதிவுகளை எழுதுக. (02 புள்ளிகள்)

**1.5** கீழே தரப்பட்டுள்ள மீதிகள் **கெமுனு விளையாட்டுக் கழகம்** சம்பந்தப்பட்டவையாகும்.

| | **ரூ.** |
|---|---|
| 2014 சனவரி 01 ஆந் திகதியில் நிகர ஏட்டுப் பெறுமதிகள் : | |
| கட்டிடங்கள் | 110,000 |
| தளபாடங்களும் இணைப்புக்களும் | 30,500 |
| விளையாட்டு உருப்படிகள் | 19,000 |
| 2014 டிசெம்பர் 31 ஆந் திகதி அட்டுறு செலவுகள் | 1,000 |
| 2014 டிசெம்பர் 31 ஆந் திகதி வங்கி மீதி (சாதகமானது) | 9,000 |
| 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேய்மானம் | 5,400 |
| 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பற்றாக்குறை (Deficit) | 5,000 |

*ஆண்டின்போது ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகள் கொள்வனவு செய்யப் படவோ விற்பனை செய்யப்படவோ இல்லை.*

2014 டிசெம்பர் 31 ஆந் திகதியில் திரள் நிதியக் கணக்கின் மீதி என்ன? (03 புள்ளிகள்)

**1.6** கீழ்வரும் தகவல்கள் **வ/ப வற்கோ (தனி) கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன.

| | **ரூ.** |
|---|---|
| 2014 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டிற்கான மொத்த வருமானம்: | |
| VAT பரிப்புடைய வழங்கல்களிலிருந்து (12% VAT உட்பட) | 1,118,880 |
| VAT விலக்களிக்கப்பட்ட வழங்கல்களிலிருந்து | 441,120 |
| 2014 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டிற்கான கொள்வனவுகள்: | |
| VAT வரிச் சிட்டைகளுடன் சேர்த்தவை (12% VAT உட்பட) | 671,328 |
| VAT வரிச் சிட்டைகள் இணைக்கப்படாதவை (மற்றும் அடங்கிய விலை) | 112,672 |

2014 அக்டோபர் 01 ஆந் திகதி முன்கொணரப்பட்ட கோரப்படாத உள்ளீடுகள் எவையும் இருக்கவில்லை.

2014 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டிற்கான செலுத்த வேண்டிய எஞ்சிய VAT / மிகையாகச் செலுத்தப்பட்ட VAT எவ்வளவு? (02 புள்ளிகள்)

***1.7** தொடக்கம் **1.8** வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடைகளை தேர்வு செய்து உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தினை எழுதி அதற்கு எதிராக விடையின் இலக்கத்தினை எழுதுக.*

**1.7** பூரணமான கணக்கேடுகளை **பேணாத** தனி வியாபாரி ஒருவர் ஆண்டிற்கான தமது விற்பனை வருமானத்தினை கணித்தறிய விரும்புகின்றார் :

கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

| | **ரூ.** |
|---|---|
| ஆரம்பத் தொக்கு | 170,000 |
| இறுதித் தொக்கு | 240,000 |
| கொள்வனவுகள் | 910,000 |

*மொத்த இலாப எல்லையானது விற்பனை வருமானத்தின் 40% ஆகும்.*

கீழே தரப்பட்டுள்ளவற்றுள் ஆண்டிற்கான விற்பனை வருமானம் எது?

(1) ரூ. 1,176,000/-. (2) ரூ. 1,400,000/-. (3) ரூ. 1,800,000/-. (4) ரூ. 2,210,000/-.

(02 புள்ளிகள்)

**1.8** 2015 மார்ச் 31 ஆந் திகதி **பர்னாந்து** என்பவர் கொண்டிருந்த இறுதித் தொக்கின் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ. 1 மில்லியன். மழை வெள்ளத்தின் காரணமாக ரூ. 300,000/- கிரயமான சில தொக்கு உருப்படிகள் பாதிப்படைந்தன. அதன் காரணமாக அவை சாதாரண விற்பனை விலையான மொத்த இலாப எல்லையாக 20% இல் கணிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட முடியாதென எதிர்பார்க்கப்படுகின்றது. பாதிப்படைந்த இந்தப் பொருட்களை விற்பனை செய்யும் ஒரு முகவரால் இந்தப் பொருட்களை வழமையான விற்பனை விலையில் 70% விலையில் விற்பனை செய்ய முடியும்.

2015 மார்ச் 31 ஆந் திகதி **பர்னாந்துவின்** நிதிநிலைக் கூற்றில் அறிக்கையிடப்பட வேண்டிய இறுதித் தொக்கின் பெறுமதி என்ன?

(1) ரூ. 1,000,000/-. (2) ரூ. 962,500/-. (3) ரூ. 952,000/-. (4) ரூ. 700,000/-.

(03 புள்ளிகள்)

*பகுதி A முடிந்தது*

## பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா இல. 02

2015 மார்ச் 31 ஆந் திகதியில் **வ/ப பர்வக்ட் (தனி) கம்பனியின்** காசேடானது வங்கி மீதியாக ரூ.156,400/- வரவு மீதியினை காட்டிய போதிலும் இது வங்கிக் கூற்று மீதியிலிருந்து வேறுபட்டிருந்தது.

பின்னர் மேற்கொண்ட சோதனையில் இந்த வேறுபாட்டிற்கான காரணங்களாக கீழ்வருவன கண்டறியப்பட்டன.

(1) வங்கியானது ரூ. 3,000/- இனை வங்கிக் கட்டணமாக அறவிட்டிருந்தது.

(2) வங்கியினால் தவறுதலாக காசோலைப் புத்தக அறவீடாக அறவிடப்பட்ட தொகை ரூ. 750/-.

(3) வாடிக்கையாளர் ஒருவரினால் நேரடியாக வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட தொகை ரூ. 10,000/- காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(4) வைப்புச் செய்யப்பட்ட கீழ்வரும் காசோலைகள் இந்த மாதத்தில் தேறியிருக்கவில்லை :

இல. 750121 : ரூ. 25,000/-

இல. 141510 : ரூ. 110,000/-

(5) வழங்கப்பட்ட கீழ்வரும் காசோலைகள் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை :

இல. 500221 : ரூ. 65,000/-

இல. 500300 : ரூ. 27,000/-

***நீங்கள் செய்ய வேண்டியது,***

வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் **தயாரிப்பதுடன்**, 2015 மார்ச் 31 ஆந் திகதியில் காணப்பட்ட வங்கிக்கூற்று மீதியினைக் **கண்டறிக**. (05 புள்ளிகள்)

## வினா இல. 03

2015 மார்ச் 31 ஆந் திகதியில் **சாந்தவின்** பேரேட்டில் வருமதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ. 225,200/- ஆக இருந்தது. வருமதிகள் பேரேட்டு தனித்தனியான கணக்கு மீதிகளின் மொத்தம் ரூ. 247,400/- ஆக காணப்பட்டது.

கீழ்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டன :

(1) ரூ. 5,600/- பெறுமதியான விற்பனைச் சிட்டை விற்பனை நாளேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய வாடிக்கையாளர் கணக்கில் ரூ. 6,500/- ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது.

(2) வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட ரூ. 5,500/- க்கான காசோலை வங்கியினால் மறுதலிக்கப்பட்டது. இது வருமதிகள் பேரேட்டில் சரியாக பதிவு செய்யப்பட்ட போதிலும், வருமதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

(3) அனுமதிக்கப்பட்ட கழிவுகள் மொத்தம் ரூ. 1,200/- கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப் படவில்லை.

(4) விற்பனை நாளேடு ரூ. 1,000/- இனால் குறைவாக கூட்டப்பட்டிருந்தது.

(5) பெறப்பட்ட காசு ரூ. 8,000/- வருமதிகள் பேரேட்டில் உரிய வாடிக்கையாளர் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**நீர் செய்ய வேண்டியது,**

பொதுப் பேரேட்டில் மீளாக்கப்பட்ட (திருத்திய) வருமதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கினைத் தயாரித்து, வருமதிகள் பேரேட்டு மீதிகளின் கூட்டுத்தொகையினை வருமதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் கணக்கிணக்கம் செய்க. (05 புள்ளிகள்)

## வினா இல. 04

2010 ஏப்ரல் 01 ஆந் திகதியில் **வ/வு கென்ட் (தனி) கம்பனி** கீழ்வரும் கட்டுறுப்புகளுக்கு அமைவாக எந்திரமொன்றினை கொள்வனவு செய்தது :

| | **ரூ.** |
|---|---:|
| நிரற்படுத்திய (listed) விலை | 1,250,000 |
| காவுகைக் கிரயம் (transport Cost) | 55,000 |
| மின்னிணைப்புத் தாபித்தற் கிரயம் | 25,000 |
| உற்பத்திக்கு முந்திய பரீட்சார்த்த ஓட்டக் கிரயம் | 20,000 |

வியாபாரக் கழிவு நிரற்படுத்திய விலையில் 20%.

எந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 8 ஆண்டுகளாகவும், அந்தக் கால முடிவில் ஒடிவுப் பெறுமதி ரூ. 20,000/- ஆகவும் மதிப்பிடப்பட்டது. கம்பனியானது அதன் எந்திரங்களை கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்கின்றது.

2014 ஏப்ரல் 01 ஆந் திகதி கென்ட் கம்பனி ரூ. 200,000/- கிரயமான புதிய ஆக்கக் கூறுகளைச் சேர்ப்பதன் மூலம் எந்திரத்தை மேம்படுத்த தீர்மானித்தது. இந்த மேம்படுத்தலினால் எந்திரத்தினை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் ஒரு அலகின் உற்பத்தி நேரம் குறைவடையும். அத்துடன், இந்த மேம்பாட்டின் காரணமாக எந்திரத்தின் எஞ்சியுள்ள பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாக அதிகரித்துள்ளதுடன் ஒடிவுப் பெறுமதியில் எதுவித மாற்றமும் இல்லை.

**நீர் செய்ய வேண்டியது,**

**கீழ்வருவனவற்றைக் கணிக்குக.**

(a) 2014 மார்ச் 31 ஆந் திகதி எந்திரத்தின் முன்கொணரற் பெறுமதி (carrying value)

(b) 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான எந்திரத்தின் தேய்மானம் (05 புள்ளிகள்)

## வினா 05

**அன்டி, ரன்டி** மற்றும் **கன்டி** ஆகியோர் பங்குடமையொன்றின் பங்காளர்கள் ஆவர். பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்கின்றது :

(1) அன்டி, ரன்டி மற்றும் கன்டி ஆகியோரிடையே இலாப, நட்டங்கள் முறையே 3 : 2 : 1 எனும் விகிதத்தில் பகிரப்பட வேண்டும்.

(2) ஒவ்வொரு பங்காளரும் வருட ஆரம்பத்திலுள்ள மூலதனக் கணக்கு மீதிகள் மீது ஆண்டிற்கு 10% வட்டி பெறுவதற்கு உரித்துடையவராவார்.

(3) **அன்டி** மற்றும் **ரன்டிக்கு** முறையே ரூ. 4,000/- மற்றும் ரூ. 6,000/- மாதாந்தச் சம்பளமாக செலுத்தப்படும்.

(4) ஆண்டு இறுதியிலுள்ள எடுப்பனவு மீதிகள் மீது ஆண்டிற்கு 6% வட்டி அறவிடப்படும்.

கீழ்வரும் தகவல்கள் பங்குடமையின் 2015 மார்ச் 31 ஆந் திகதிப் பரீட்சை மீதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **வரவு (ரூ.'000)** | **செலவு (ரூ.'000)** |
|---|---|---|
| 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி பங்காளர் மூலதனக் கணக்கு : | | |
| **அன்டி** | | 1,800 |
| **ரன்டி** | | 1,200 |
| **கன்டி** | | 600 |
| 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி பங்காளர் நடைமுறைக் கணக்கு : | | |
| **அன்டி** | | 30 |
| **ரன்டி** | 50 | |
| **கன்டி** | | 70 |
| எடுப்பனவுகள் | | |
| **அன்டி y** (2014 யூலை 01 ஆந் திகதியில்) | 50 | |
| **ரன்டி** (2014 அக்டோபர் 01 ஆந் திகதியில்) | 20 | |
| **கன்டி** (2015 சனவரி 01 ஆந் திகதியில்) | 30 | |

2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் நிகர இலாபம் ரூ.594,000/- ஆகும்.

**நீர் செய்ய வேண்டியது,**

2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பங்காளர் நடைமுறைக் கணக்குகளை நிரல்வடிவில் தயாரிக்குக. (05 புள்ளிகள்)

## வினா இல. 06

பங்குடமையொன்றின் பங்காளர்கள் **பீன்** மற்றும் **டீன்** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 2 : 3 எனும் விகிதத்தில் பகிருகின்றனர். இயலுமையினைக் கொண்டுள்ள வியாபார நபரான **றீன்** என்பவர் இலாப, நட்டத்தில் 50% பெறும் வகையில் பங்குடமையின் புதிய பங்காளராக இணைந்துள்ளார். தற்போதைய பங்குடமையின் பெறுமதியின் தமது பங்கிற்கு பொருந்தும் வகையில் தேவையான மூலதனத்தினை முதலீடு செய்ய இணங்கியுள்ளார்.

தற்போதைய பங்குடமையின் பெறுமதி கீழ்வருமாறு :

| | **பீன் (ரூ.)** | **டீன் (ரூ.)** |
|---|---|---|
| பங்காளர் மூலதனக் கணக்குகள் (செலவு) | 500,000 | 75,000 |
| பங்காளர் நடைமுறைக் கணக்குகள் (செலவு) | 212,000 | 318,000 |

கணக்கேடுகளில் கணக்கில் கொள்ளப்பட்டிராத நன்மதிப்பின் பெறுமதி ரூ. 500,000/-.

***நீர் செய்ய வேண்டியது,***

(a) ***றீன்*** இணைந்த பின்னர் புதிய இலாப, நட்டப் பகிர்வு விகிதத்தினை **இனங்காண்க.**

(b) தற்போதைய பங்காளர்களின் இழப்பு விகிதத்தினை (sacrificing ratio) **கணிக்குக.**

(c) பங்காளர்கள் நன்மதிப்பினை கணக்கேடுகளில் காட்டுவதற்கு இணங்கினால் நன்மதிப்புப் பங்கு உட்பட **றீன்** முதலீடு செய்ய வேண்டிய மொத்த முதலீட்டுப் பெறுமதியினைக் கணிக்குக. (05 புள்ளிகள்)

*பகுதி B முடிந்தது*

# <u>பகுதி C</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா இல. 07

**அமல், நிமல்** மற்றும் **கமல்** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 2 : 2 : 1 எனும் விகிதத்தில் பகிரும், **அன்கா** எனும் பங்குடமையின் பங்காளர்கள் ஆவர். அவர்களின் பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றிற்கு ஏற்பாடு செய்கின்றது :

- **அமல்** மற்றும் **கமலுக்கு** மாதாந்தச் சம்பளமாக முறையே ரூ. 3,000/- மற்றும் ரூ. 5,000/- செலுத்தப்பட வேண்டும்.

2015 மார்ச் 31 ஆந் திகதியில் **அன்காவின்** பரீட்சை மீதி கீழ்வருமாறு :

**2015 மார்ச் 31 ஆந் திகதியில் அன்காவின் பரீட்சை மீதி**

| | **வரவு (ரூ.'000)** | **செலவு (ரூ.'000)** |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்: | | |
| காணி | 100 | |
| கட்டிடங்கள் | 200 | |
| விநியோக வாகனங்கள் | 400 | |
| 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியில் திரள் தேய்மானம் : | | |
| கட்டிடங்கள் | | 60 |
| விநியோக வாகனங்கள் | | 80 |
| வியாபார வருமதிகள் | 94 | |
| வியாபார சென்மதிகள் | | 349 |
| வங்கி மீதி | 75 | |
| 2015 மார்ச் 31 இல் தொக்குகள் - கிரயத்தில் | 75 | |
| விற்பனைக் கிரயம் | 570 | |
| விற்பனைகள் | | 922 |
| நிருவாக, நிறுவகச் செலவுகள் | 50 | |
| விற்பனை, விநியோகச் செலவுகள் | 14 | |
| நிதிச் செலவுகள் | 10 | |
| 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி மூலதனக் கணக்குகள் : | | |
| **அமல்** | | 120 |
| **நிமல்** | | 160 |
| **கமல்** | | 80 |
| 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி பங்காளர் நடைமுறைக் கணக்குகள்: | | |
| **அமல்** | | 5 |
| **நிமல்** | | 5 |
| **கமல்** | 7 | |
| பங்காளர் எடுப்பனவுகள் : **அமல்** | 42 | |
| **நிமல்** | 24 | |
| **கமல்** | 24 | |
| பங்காளர்கள் சம்பளம் | 96 | |
| **மொத்தம்** | **1,781** | **1,781** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2015 மார்ச் 31 ஆந் திகதியில் தொக்குகளின் நிகர தேறுகைப் பெறுமதி ரூ. 70,000/- ஆக மதிப்பிடப்பட்டது.

(2) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நேர்கோட்டு அடிப்படையில், கிரயத்தில் தேய்மானம் செய்யப்படல் வேண்டும். சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்தரும் ஆயுட்காலங்கள் வருமாறு :

கட்டிடங்கள் : 20 ஆண்டுகள்

விநியோக வாகனங்கள் : 5 ஆண்டுகள்.

(3) ரூ. 4,000/- அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்பட வேண்டும்.

(4) 2015 மார்ச் 31 ஆந் திகதியில் முற்கொடுப்பனவுகள் மற்றும் அட்டுறுக்கள் கீழ்வருமாறு :

| | **அட்டுறுக்கள் (ரூ.)** | **முற்கொடுப்பனவு (ரூ.)** |
|---|---|---|
| வாகனக் காப்புறுதிக் கட்டணம் | 5,000 | - |
| அலுவலகச் செலவுகள் | - | 6,000 |

**நீர் செய்ய வேண்டியது,**

(a) 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கு **அன்காவின்** வருமானக் கூற்றினைத் தயாரிக்குக.

(b) 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கு **அன்காவின்** இலாப, நட்டக் கணக்கினை தயாரிக்குக. (10 புள்ளிகள்)

## வினா இல. 08

2004 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட **சில்வர் ஸ்ரார் விளையாட்டுக் கழகம்** 2014 சனவரி 01 ஆந் திகதியில் 75 சாதாரண அங்கத்தவர்களையும் 25 ஆயுள் அங்கத்தவர்களையும் கொண்டிருந்தது. சாதாரண அங்கத்தவர்களிடமிருந்து வருடாந்தச் சந்தாவாக அங்கத்தவர் ஒருவரிடம் ரூ.250/- அறவிடப்படுவதுடன் ஆயுள் அங்கத்தவரிடமிருந்து ஆயுள் அங்கத்துவக் கட்டணமாக ரூ. 5,000/- அறவிடப்படும்.

கழகத்தின் யாப்பின்படி ஆயுள் அங்கத்துவக் கட்டணத்தின் 1/20 பங்கு அங்கத்தவர் ஆயுள் அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொண்ட ஆண்டிலிருந்து 20 ஆண்டுகளுக்கு வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

2014 சனவரி 01 ஆந் திகதியில் 25 சாதாரண அங்கத்தவர்கள் 2013 ஆம் ஆண்டிற்கான தமது வருடாந்த சந்தாவினைச் செலுத்தாமல் இருந்தனர். 03 சாதாரண அங்கத்தவர்கள் 2014 ஆம் ஆண்டிற்கான தமது சந்தாவினை முற்பணமாகச் செலுத்தியிருந்தனர். 2014 சனவரி 01 ஆந் திகதி ஆயுள் அங்கத்துவக் கட்டணக் கணக்கு செலவு மீதியாக ரூ. 87,500/- இனைக் காட்டியது.

2014 ஆம் ஆண்டின்போது கழகம் காசாகப் பெற்ற சந்தாப் பணங்கள் கீழ்வருமாறு :

(1) 20 சாதாரண அங்கத்தவர்கள் 2013 ஆம் ஆண்டிற்கான தமது சந்தாவைச் செலுத்தினர்.

(2) 65 சாதாரண அங்கத்தவர்கள் 2014 ஆம் ஆண்டிற்கான தமது சந்தாவைச் செலுத்தினர்.

(3) 5 சாதாரண அங்கத்தவர்கள் 2015 ஆம் ஆண்டிற்கான தமது சந்தாவைச் செலுத்தினர்.

(4) 2014 ஆம் ஆண்டில் இணைந்துகொண்ட 10 புதிய ஆயுள் அங்கத்தவர்கள் தமது ஆயுள் அங்கத்துவக் கட்டணத்தை செலுத்தினர்.

**நீர் செய்ய வேண்டியது,**

2014 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக கீழ்வருவனவற்றைத் தயாரிக்குக :

(a) அங்கத்தவர்களின் சந்தாக் கணக்கு

(b) கீழ்வரும் கணிப்புகளுக்கான செயன்முறைகளை தெளிவாகக் காட்டி, ஆயுள் அங்கத்துவக் கட்டணக் கணக்கு

(i) 2014 ஆம் ஆண்டிற்கான சாதாரண அங்கத்துவக் கட்டண வருமானம்

(ii) 2014 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட சாதாரண அங்கத்துவக் கட்டணம்

(iii) 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான நிலுவையிலிருந்த சாதாரண அங்கத்துவக் கட்டணங்கள்

(iv) 2014 ஆம் ஆண்டில் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படவுள்ள ஆயுள் அங்கத்துவக் கட்டணம் (10 புள்ளிகள்)

## வினா இல. 09

(a) பரிப்பொன்று, ஒரு நடைமுறைப் பரிப்பாக ஆவதற்கு திருப்தி செய்யப்பட வேண்டிய தேர்வு நிபந்தனைகள் நான்கினை (04) **கூறுக.** (02 புள்ளிகள்)

(b) கீழ்வரும் தகவல்கள் தனியுரிமையாளர் வியாபாரமான **கண்டி ஸ்டோர்ஸின்** 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கேடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன :

| | **2015 மார்ச் 31 (ரூ.)** | **2014 ஏப்ரல் 01 (ரூ.)** |
|---|---|---|
| தொக்குகள் | 10,500 | 9,000 |
| வியாபார வருமதிகள் | 40,000 | 36,000 |
| வருமானம் | 275,000 | |
| கொள்வனவுகள் | 150,000 | |
| வங்கி மீதி / (மேலதிகப் பற்று) | (3,000) | 5,000 |
| ஆண்டிற்கான பல்லினச் செலவுகள் (சம்பளம், EPF மற்றும் ETF தவிர்ந்தவை) | 11,300 | |
| பெறப்பட்ட கழிவுகள் | 3,000 | |
| அனுமதிக்கப்பட்ட கழிவு | 1,500 | |

கீழ்வரும் மேலதிகச் செலவுகள் தரப்பட்டுள்ளன :

(1) ரூ. 2,000/- இனை அறவிட முடியாக் கடனாக பதிவழிக்கவும் ஐயுறவுக் கடனுக்கான ஏற்பாடாக எஞ்சிய வியாபார வருமதிகளின் 5% ஆக ஏற்பாடு செய்யவும் தீர்மானிக்கப் பட்டது. மேலே தரப்பட்டுள்ள மீதிகள் அறவிட முடியாக் கடன் மற்றும் ஐயுறவுக் கடன் ஏற்பாட்டிற்கு செம்மையாக்கங்கள் மேற்கொள்ளப்பட முன்னதாக பெறப்பட்டவையாகும்.

(2) **கண்டி ஸ்டோர்ஸ்** நியம விகிதங்களில் பங்களிப்புச் செய்யப்படும் EPF மற்றும் ETF க்கு பதிவு செய்யப்பட்ட ஒரு ஊழியரை மாத்திரம் கொண்டுள்ளதுடன் ஆண்டின்போது அவருக்கு செலுத்திய மொத்தச் சம்பளம் ரூ. 44,500/-.

**நீர் செய்ய வேண்டியது,**

2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்றினைத் **தயாரிக்குக**. (08 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிந்தது*

## பகுதி D

ஒரு (01) கட்டாய வினா

(25 புள்ளிகள்)

### வினா இல. 10

(a) நீண்டகால நிதியளிப்பு மூலங்களாக உரிமையாண்மைப் பங்குகளை (equity shares) வழங்குவதன் அனுகூலங்கள் மூன்றினை (03) **கூறுக**. (03 புள்ளிகள்)

(b) **வ/வு பெயார் டீல் (தனி) கம்பனியின்** 2015 மார்ச் 31 ஆந் திகதி பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது :

**2015 மார்ச் 31 ஆந் திகதி பரீட்சை மீதி**

| | **வரவு (ரூ.'000)** | **செலவு (ரூ.'000)** |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் - 1,000,000 சாதாரண பங்குகள் | | 59,000 |
| 2014 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 11,200 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்: | | |
| காணியும் கட்டடங்களும் (காணிப் பெறுமதி ரூ. 10 மில்லியன்) | 60,000 | |
| பொறித்தொகுதி | 94,500 | |
| 2014 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம் : | | |
| கட்டடங்கள் | | 20,000 |
| பொறித்தொகுதி | | 24,500 |
| 2015 மார்ச் 31 ஆந் திகதியில் தொக்குகள் | 43,700 | |
| வியாபார வருமதிகள் | 42,200 | |
| வங்கி மீதி | 8,300 | |
| வியாபார சென்மதிகள் | | 51,700 |
| 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி ஐயுறவுக் கடன் ஏற்பாடு | | 1,000 |
| விற்பனை வருமானம் | | 550,000 |
| விற்பனைக் கிரயம் | 403,900 | |
| விநியோகச் செலவுகள் | 21,500 | |
| நிருவாகச் செலவுகள் | 30,900 | |
| நிதிச் செலவுகள் | 700 | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | 20,000 | |
| 2014 ஏப்ரல் 01 இல் வருமான வரி ஏற்பாட்டுக் கணக்கு | | 7,400 |
| ஆண்டின்போது செலுத்திய வருமான வரி | 7,600 | |
| ஊழியர் இழப்பீட்டிற்கான ஏற்பாடு | | 500 |
| தொங்கற் கணக்கு | | 8,000 |
| | **733,300** | **733,300** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2015 மார்ச் 31 ஆந் திகதியில் ரூ. 200,000 வருமதியாக இருந்த வியாபாரக் கடன்பட்டோன் ஒருவர் 2015 ஏப்ரல் 20 ஆந் திகதி வங்குரோத்து நிலை அடைந்தவராக பிரகடனப்படுத்தப் பட்டார். ஆண்டின் இறுதியில் வியாபார வருமதிகள் மீதியின் 5% ஐயுறவுக் கடனாக ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(2) இந்த ஆண்டின்போது காப்புறுதி மற்றும் மின்கட்டணங்களாக முறையே ரூ. 300,000/- மற்றும் ரூ. 200,000/- இனை கம்பனி செலுத்தியிருந்தது. இந்தக் கொடுப்பனவுகள் நிருவாகச் செலவுகளில் உட்படுத்தப்பட்டுள்ளன.

(3) 2015 மார்ச் 31 ஆந் திகதி அட்டுறுக்களும் முற்கொடுப்பனவுகளும் கீழ்வருமாறு :

| | அட்டுறு (ரூ.) | முற்கொடுப்பனவு (ரூ.) |
|---|---|---|
| காப்புறுதி | - | 100,000 |
| மின்கட்டணம் | 90,000 | - |

(4) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் தேய்மானம் செய்யப்படும். சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்தரும் ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு :

கட்டடங்கள் : 10 ஆண்டுகள்

பொறித்தொகுதி : 5 ஆண்டுகள்

(5) வரிமதிப்பாண்டு 2013/14 க்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூ. 7,600,000/- வங்கி நடைமுறைக் கணக்கினூடாக இந்த ஆண்டில் செலுத்தித் தீர்க்கப்பட்டது. வரிமதிப்பாண்டு 2014/15 க்கான மொத்த வருமானவரிப் பரிப்பு ரூ. 6,000,000/- மில்லியனாக மதிப்பிடப் பட்டுள்ளது.

(6) ஊழியரொருவர் 2015 மார்ச் 01 ஆந் திகதி வேலையின்போது ஏற்பட்ட விபத்தின் காரணமாக அவயமொன்றை இழந்ததனால் நட்டஈடு கோரி கம்பனிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார். தேவையான பாதுகாப்பு உபகரணங்களை தொழில் வழங்குநர் (கம்பனி) வழங்கியிராத காரணத்தினால் விபத்து நிகழ்திருப்பதனால் வழக்கில் தோற்பதற்கான சாத்தியம் 80% எனும் எடுகோளின் அடிப்படையில் கம்பனியானது ஆரம்பத்தில் அதற்கு எதிரான கோரிக்கை ரூ. 500,000/- என மதிப்பிட்டு கணக்குகளில் அதற்கு ஏற்பாடு செய்தது. 2015 மே 30 ஆந் திகதி நீதிமன்றம் அந்த ஊழியருக்கு ரூ. 750,000/- இனை நட்டஈடாகச் செலுத்துமாறு கம்பனிக்கு ஆணை வழங்கியது.

(7) தொங்கற் கணக்கு மீதியானது ஆண்டின்போது வழங்கப்பட்ட 100,000 சாதாரண பங்குகளின் காரணமாக கிடைத்த தொகையினை பிரதிபலிக்கிறது.

(8) நிதிக் கூற்றுக்கள் வழங்குவதற்காக 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

**நீர் செய்ய வேண்டியது,**

முகாமையின் தேவைக்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (10 புள்ளிகள்)

(b) 2015 மார்ச் 31 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்று. (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிந்தது*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |